தகவல் சட்டம் 2005
அறியும் உரிமை

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 01.04.2026**

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 11497/F/2024**

திரு.த.சுதாகர், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
கள்ளக்குறிச்சி வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 202.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.த.சுதாகர், அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.மு.செல்வகுமார், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், கள்ளக்குறிச்சி வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 202 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 10.06.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கள்ளக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 8, 9-ன் கீர் தரக்கூடாது என்று உள்ள பதிவேடுகளின் பட்டியலை தகவலாக வழங்கவும்” என்பன போன்ற தகவல்களை 11 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், அரசு தலைமை செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-600 009 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ அரசு சார்புச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்கள் கடித எண்.8373/பொது.3(2)/2024-1, நாள் 19.06.2024 தேதியிட்ட கடிதத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தினைப் பெற்ற மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் த.அ.உ.ப.எண்.(அ5)/897/2024, நாள் 04.07.2024 தேதியிட்ட கடிதத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்காத காரணத்தால் மனுதாரர் 12.07.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல்கள் கிடைக்கப்பெறாததால் 30.08.2024 தேதியிட்டு பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து கடித எண்.அ.உ.ச.2005/சி.ப.எண்.484-11/2026, நாள் 01.04.2026 தேதியிட்ட கடிதத்தில் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பால் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதை ஆணையம் உறுதி செய்து, ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கும் முழுமையான / திருத்திய சரியான தகவல்களை மனுதாரருக்கு <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 30.04.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மனுதாரரின் 10.06.2024 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்களை வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.அண்ணாமலை, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 30.04.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11497/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 202.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்**
**திரு.அண்ணாமலை,**
**தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**கள்ளக்குறிச்சி வட்டம்,**
**கள்ளக்குறிச்சி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.சு.சுதாகர்,
எண்.1/117 பி, தெற்கு தெரு,
பட்டுத்துறை,
தலைவாசல் வட்டம்,
சேலம் மாவட்டம்-636 112.

**<u>நகல்</u>**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.

Copy to: File NS/PA-